**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC. 1917/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 28.11.2025.**

| | |
|---|---|
| **Name : சக்திவேல்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மலையம்பாளையத்தில் குடியிருந்து டெய்லராக வேலை செய்கிறேன். விபத்தில் அடிப்பட்டது என் தகப்பனார் செல்லமுத்து ஆவார். கடந்த 27.03.2025 ம் தேதியன்று என் தந்தை மதியம் 12.45 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு என் தம்பியை பார்க்க சவுரியூர் செல்வதற்காக சைக்கிளை தள்ளிக் கொண்டு ஆடையூர் மெயின் ரோட்டில் செல்லும் போது ஜலகண்டாபுரத்திலிருந்து திரும்பும் போது அவருக்கு பின்னால் சுசீகி இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த நபர் என் அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அருகிலிருந்தவர்கள் தகவல் சொன்னார்கள்.

2) நான் சம்பவயிடம் சென்று பார்க்கும் போது என் அப்பாவை ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். நான் என் மனைவி ஆகியோர் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று என் அப்பாவை பார்த்தேன். என் அப்பாவின் தலை கண்ணம், கை மற்றும் கால்களில் அடிப்பட்டிருந்தது. விபத்து ஏற்படுத்தியவரை யார் என்று எனக்கு தெரியாது.

3) மருத்துவமனைக்கு வந்த போலீசார் என் அப்பா மயக்கநிலையில் இருந்ததால் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள்.புகார் வாக்குமூலத்திலுள்ள

கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு என்று விசாரித்தார்கள் என்றால் சேலம் அரசு மருத்துவமனையில் விபத்து நடந்த அன்று மாலையே விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் ஒரு கையொப்பமும், மருத்துவமனையில் ஒரு கையொப்பமும் செய்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து போட்டதாகும்.

5) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என் மனைவி எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல என் மனைவி எழுதி அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் ஆமாம்.

6) வாகன பதிவெண் விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நானும் புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.எனக்கு தகவல் யார் கொடுத்தது என்றால் என் தம்பி பாலாஜி தகவல் கொடுத்தார். மருத்துவமனைக்கு யார் என் அப்பாவை சேர்த்தது என்றால் என் தம்பி பாலாஜி தான் சேர்த்தார். சம்பவயிடம் சென்று சம்பவம் பற்றி விசாரித்தேனா என்றால் சம்பவயிடம் சென்றேன் விபத்து பற்றி சொன்னதால் நான் சேலம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

7) பட்டியல் சாட்சி 3 பழனிமுத்து என் சித்தப்பா ஆவார். நான் சேலம் மருத்துவமனைக்கு சென்ற பின்னர் தான் என் சித்தப்பா பழனிமுத்து என்பவர் மருத்துவமனைக்கு வந்தார். என் சித்தப்பாவிற்கு யார் தகவல் தெரிந்து வந்தார் என்றால் என் வீட்டு அருகில் உள்ளதால் சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவயிடம் வந்து பார்த்துவிட்டு அங்கிருந்து அடிப்பட்ட என் தகப்பனாருடன் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

8) நான் கேள்விப்பட்டது போல் கேள்விப்பட்ட விதத்ததில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் என் தந்தை அவரது சைக்கிளை ஓட்டிச் சென்று

எந்த சைகையும் செய்யாமல் இடது புறமாக திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC. 1917/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 28.11.2025.**

| Name : செல்லமுத்து | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மலையம்பாளையத்தில் குடியிருந்து தறி ஓட்டி வருகிறேன். கடந்த 27.03.2025ம் தேதி 12.30 மணிக்கு அ.சா.1ன் வீட்டிற்கு சென்றுவிட்டு என் இளைய மகன் வீட்டிற்கு செல்வதற்காக என்னுடைய சைக்கிளை தள்ளிக் கொண்டு ஜலகண்டாபுரத்திலிருந்து வந்து வலது பக்கம் திரும்பிய போது எனக்கு பின்னால் சுசீகி இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த நபர் என் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார்.

2) விபத்தில் எனக்கு தலை, இரண்டு முழங்கால் ஆகிய இடங்களில் பலத்த அடிப்பட்டது. எனக்கு பின்னால் விபத்து ஏற்படுத்தியதால் நான் மயக்கமாகிவிட்டேன். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். ஆஜர் எதிரியை நான் தற்போது தான் பார்க்கிறேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் ஜலகண்டாபுரத்தில் உள்ள இளங்கோ மருத்துவமனையில் நான் முதல் உதவி சிகிச்சை பெற்ற போது போலீசார் என்னை வந்து பார்த்தனர். சேலம் அரசு மருத்துவமனையில் போலீசார்

என்னை விசாரிக்கவில்லை. நான் என் பெரிய மகன் வீட்டிலிருந்து இளைய மகன் வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் சாலையின் இடது புறம் தான் செல்ல வேண்டுமென்றால் சரிதான்.

4) நான் சாலையின் இடது புறமாக திரும்பினேனா, வலது புறமாக திரும்பினேனா என்றால் சைக்கிளை மெதுவாக ஓட்டிக் கொண்டு இடது புறமாக திரும்பும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் சைக்கிளை ஓட்டிச் சென்று எந்த சைகையும் செய்யாமல் இடது புறமாக திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC. 1917/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 28.11.2025.**

| | |
|---|---|
| **Name : பாலாஜி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் எம்ஜிஆர் நகரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.2 என் அப்பா ஆவார். சம்பவத்தின் போது நான் வீட்டிலிருந்தேன். கடந்த 27.03.2025ம் தேதி மதியம் 1.15 மணிக்கு என் அப்பா அ.சா.1ன் வீட்டிற்கு சென்றுவிட்டு என்னுடைய வீட்டிற்கு ஜலகண்டாபுரம் ரோட்டில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன்.

2) தகவல் தெரிந்து சம்பவயிடம் சென்று பார்த்தேன். என் அப்பா தலை மற்றும் கைகளில் அடிப்பட்டு கீழே கிடந்தார். நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். ஆஜர் எதிரி தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) விபத்து நடந்த அன்றே சேலம் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தனர். அதன் பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. யார் தகவல் சொன்னார்கள் என்றால் அருகிலிருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். தற்போது நீதிமன்றத்தில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும்

சொன்னேன் என்றால் ஆமாம். நான் கேள்விப்பட்டது போல் கேள்விப்பட்ட விதத்ததில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் என் தந்தை அவரது சைக்கிளை ஓட்டிச் சென்று எந்த சைகையும் செய்யாமல் இடது புறமாக திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**